புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது

# இந்துசாதனம்.

ஸ்தாபிதம் (1889)

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரிக் கிரயம்.

| | |
|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு | ரூ. 5-60 |
| வெளியூர், இந்தியா: ,, | ரூ. 9-40 |
| தொலைவாய்ப்பகுதி: ,, | ரூ. 9-40 |
| தனிப்பிரதி: | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:— | ஒருகலம் | ரூ. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரூ. 5-00 |
| ,, | கால்கலம் | ரூ. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு ஷை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினுலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—கூ௬. } யாழ்ப்பாணம்:—குரோதனஹூ ஆனிமீ கூஉ; (1925 ஜூன் 22) திங்கட்கிழமை. { இலக்கம்—கூ௭.

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தந் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்தவிநாயகன்றாள் வணங்கிவாழ்வாம்'

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## இனும் காலண்டர் இனும்.

எங்களிடம் கட்டிவெள்ளியிலும் 1-ம் கெ. 2-ம் கெ. வெள்ளியிலும் மிச்சம் அப்புரவாக வேலைமுடித்த முாகருத்தி கெள்காதரக்கொடி கைசோர்வை, முகப்புகொடி, காஞ்சி அரணுக் கொடி, கால் தண்டை, கொலுசு, வகைகளும் கடயம் கங்கணம், மயிர்மாட்டி, ஒட்டியாணமும், இமிடேசன் செகப்பு கம்பல்தோடு கடுக்கன் மோதிரங்கள் இன்னும் இதாவெள்ளி தங்க நகைகளும் பட்டு பருத்தி முதலிய ஜவுளி தினுசுகளும் விலைகள் சகாயம். விலாசம் தெரிவித்தால் பிரைஸ்லீஸ்டு அனுப்புகிறோம். சுபம்.

தொ. வெ. சென்னிசெட்டி & சன்ஸ்
சராப். ஜவுளி வியாபாரம்
குகை சேலம் ...ன் இந்தியா.

(H. 31)

25-8-23 ல் சென்னையில் நடந்த தமிழ்வைத்திய கான்பரன்ஸ் & கண்காட்சியில் இவர் மருந்துகள் தேவ ஔஷதங்களென்று தங்க மெடலும் வைத்தியபதிப்பட்டமும் பெற்றவர்.

உலகெங்கும் புகழ்பெற்று அநேக பரிசுகள், நற்சாக்ஷிகள் பெற்றது!

நமது ஜீ. எ. மாத்திரை 50 வாங்குவோர்கட்கு ரூபா 2 விலையுள்ள "மாந்திரீக ரக்ஷை" ஆர்டருடன் தேவை என்று எழுதுபவர்கட்கு மட்டும் இனமாய் (1) அனுப்பப்படும்.

## இழந்துபோன பலத்தை

ஒரு குளிகை சாப்பிட்ட ஆறுமணி நேரத்தில் கொடுக்கும்

ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை (கைகண்டது)

இதுவரையிலும் எவராலும் கண்டு பிடிக்கப்படாத ஓர் அபூர்வ மருந்து.
அபூர்வசக்தி வாய்ந்தது! ஆச்சரியதுணமுள்ளது!! இதை ஒரு முறை பரிசோதித்து பாருங்கள்

வீரியத்தைக் கெட்டிப்படுத்தும்; தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றி, புஷ்டியை உண்டாக்குவதில் இது எதற்கும் நிகரற்றது! எந்த மருந்தும் இதற்கு இணையல்ல! ஒரே குளிகையிற் பரிசோதித்துப் பார்க்கலாம்! பத்தியமில்லை.

150-பில்ஸ் ரூ. 10-0-0 50-பில்ஸ் ரூ. 4-0-0 20-பில்ஸ் ரூ. 2-0-0 வி. பி. சார்ஜ் வேறு

நற்சாக்ஷி மதராஸ் S. ஸ்ரீனிவாஸய்யங்கார் எழுதுவதை கவனியுங்கள்.

பலஹீனம் நரம்புத்தளர்ச்சி ஞாபகசக்திக்குறைவால் வருந்திக்கொண்டிருந்தேன் அதற்காக நான் அநேக டாக்டர்களிடம் சாப்பிட்டு ஒன்றிலும் குணபடவில்லை. தங்கள் ஜீ எ மாத்திரைகளைச் சாப்பிட்டு பூர்ண சுகம் வேண்டியவர்கள் இந்த அருமையான மருந்தை வாங்கி யருந்தித் தேகத்தைப்பலப்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதே எமதுவிருப்பம். (இதற்கு கியாரண்டீ கொடுக்கப்படும்).

## பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும் பொறுக்க முடியாத வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, எரிச்சல், குத்து உடனே நிற்கும் புட்டி ரூபா 2-0-0.

நற்சாட்சி:—கண்டி, சிலோன் கு. மதார்சாய்பு எழுதுவதைக் கவனியுங்கள்.

உங்கள் பிரமேகநிவாரணியைச் சாப்பிட்டதில் ......உடம்பு இப்போது பூரணசுகம். இன்னொரு ஆளுக்கு வேண்டியதாயிருக்கின்றது. ஒரு புட்டி உடனே அனுப்பவும்.

## புஷ்பிக ரோஸ் பற்பொடி

பொறுக்க முடியாத பல்வலியை ஒருநொடியில் நிறுத்தும். பல்வலி, பல்லரணை, ஈகிர் சுரவு, ஈகிர் வீக்கம், புழுக்குடைச்சல் முதலிய வியாதிகளை நீக்கி ஆயுள்பரியந்தம் தந்தரோகம் அணுகவொட்டாது. 4 டின் ரூபா 1. டஜன் ரூபா 2-8-0 பெரியபாகெட் 1-க்கு ரூபா 2-0 0 வியாபாரிகளுக்கு 6-டஜன் ரூபா 13-0-0 12 டஜன் ரூபா 25. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

5-7-22-ல் சுதேசமித்திரன் தங்கள் பேப்பரில் வெளியிட்ட அபிப்பிராயம்:—பல் துலக்குவதற்கு ரம்மியமாயும் நல்லவாசனையுடனிருக்கின்றன, வேண்டுபவர்கள் பழனி, டி. ஆர். கெ. இடம் பெற்றுக்கொள்க.

## கெர்ப்ப சஞ்சீவி எண்ணெய்.

பஹிஷ்டை காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை மிக்க ஆச்சரியமாய் அந்தக்ஷணமே நிறுத்தும் காலாகாலத்தில் கிரமப்படி பஹிஷ்டை ஆகும். பலஹீனம், மலடுந்தம், சரீரம் இளைக்கும் தன்மை கெர்ப்ப நோய் சம்பந்தமான சகலவியாதிகளையும் நீக்கும். புட்டி ரூபா 2

## மாந்திரீக ரட்சை.

இதை அணிந்து கொண்டால் சகல வசியம், தனலாபம், நினைத்தகாரிய சித்தி, புத்திரசந்தானம், தொழில் அபிவிருத்தி, உண்டாகும். செய்வினை, பேய், பிசாசு அணுகாது; குழந்தைகளின் பிணிமுதலியன நீங்கும். ரக்ஷை 1-க்கு ரூபா 2. ரக்ஷை 6-க்கு ரூபா 9. முக்கியமான காரியங்களுக்கு ஸ்பெஷலாக வேண்டியதை செய்தனுப்பப்படும் ரக்ஷை ரூபா 10.

பினாங்கு, சிங்கப்பூர், மற்ற மலாய் தேசவாசிகள் மருந்தின் கிரயமும், பார்சல் செலவு ரூபா 2-ம் சேர்த்து முற்பணம் அனுப்பினால் மட்டிலருந்து அனுப்பப்படும்.

**வைத்தியபதி, டி. ஆர். கருப்பணபிள்ளை,**
ஆயுள்வேத வைத்தியசாலை, பழனி.

Q 66. [illegible])

## உங்கள் உணவின் உருசி.

சமையல்பாகத்திற் கெட்டுப்போகாமலிருக்க எப்பொழுதும் பிரக்கியாதிபெற்று விளங்கும்

ருக்மணி குக்கர்

சமையல் அடுக்கில் சமையல்செய்யுங்கள் சாதமும் 4, 5 பதார்த்த வகைகளும் இரண்டு முதல் ஏட்டுப்பேருக்கு, ஒரேமணி நேரத்தில் சொற்ப செலவில் தொந்தரவில்லாமலே தயாரிக்கலாம். உணவின் உருசியும் சத்தும் நிறைந்திருக்கும். மாணவர் பிரயாணிகள் முதலியோருக்கும், வீடுகளுக்கும், தனித்தவர்களுக்கும் உபயோகம். விலை 18 ரூபாமுதல் 33 வரை. ஜாபிதா இனம்.

ருக்மணி குக்கர் கம்பெனி,
(H) இராயபுரம்,
சென்னபட்டினம்.

(Y. 45.)

[ESTABLISHED 1809]

## MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
Kairul Muslimeen Medical Hall
PORTONOVO (SouthArcotDistrict).

## ஏ ஜ ண் டு தே வை.

குழிக்கப்போய் சேற்றைப் பூசிக்கோள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்
அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா 1000 இனமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்றுவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாப்ஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் சந்தோஷிக்கச் செய்வது

உ த் த ர வா த மு ள் ள து.

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லறை இன்பவாழ்க்கையையடைந்து புத்திர பௌத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடிய தமான ஒப்பற்றஓர்புருஷசஞ்சீவியாகின்றது. மற்றவிபரங்களை நமதுகேட்லாக்கில்காணலாம்.

லேகியத்தின் முக்கிய குணமாவது

வாத பித்த சிலேத்ம பிருதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, எழுவகைத்தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்ச்சுருக்கு, நீரெரிச்சல், நீர்த்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஒடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களைச் சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்த விர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேக் [illegible] வெளியிட்டிருக்கிறோம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.
வி. பி. தபாற் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினால் V. P. தபாற்செலவு இனம். பினாங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசிகள் மருந்தின் கிரையமும், தபால்சார்ஜு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். வெளியூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது ஷை குருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் ரூபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயமும் ரூபா 1000 இனமாயும் கொடுக்கப்படும். அப்படி ரூபித்தும் இனமுடையபணமும் கிரயமும் கொடுபடா விட்டால் கோர்ட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அன்றியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிகுணமுண்டென்றுவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தைச் செய்து காட்டினாலாவது முன் கண்ட இனம் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

TL. ADDRESS:—
Khader Bros.
Porto Novo.
(C. 38).

என்மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.


## ஒரு சாதாரணபொருளே.

நோவுக்கான தைலத்தில் சுகந்தம்தேடமாட்டீர். அநேகமாய்ச் சுகந்தம் உண்டாக்குவதில் நோவை நீக்குங் குணம் மறைந்துவிடுகிறது.

லிட்டில்ஸ் ஓரியன்டல் பாம்

செய்வதில் சுகந்தமே வேண்டுமென்று எதுவுஞ் சேர்க்கவில்லை நோவைக் குணமாக்குஞ் சரக்குகளில் அவைகளின் குணத்தை விலக்கவில்லை. 12 திறமான சரக்குகள் சேர்த்து அதி உயர்ந்த குணங்கள் வாய்த்த தைலமே லிட்டில்ஸ் ஓரியன்டல் பாம். அதனால் அது உடனே தில்வாயு, தலைக்குடைச்சல், இடுப்பு வலி, பாரிச வாய்வு, வாதரோகம், மண்டையிடிப்பு, முதலிய நோவுகளை திடமாய்க் குணப்படுத்துகிறது.

4—L—25.




(Y. 41. B.)

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— குரோதன வருஷம் ஆனிமீ ௧௨ திங்கட்கிழமை.


## காலஞ்சென்ற தேசபந்து சித்தரஞ்சன தாஸ்.

"வீரர்களின் நாயகமே! தீக்ஷகாரே!
கோடைவள்ளால்! நிலையார் கீர்த்தி
யாதனே! மன்னரேலாம் புகழ்கின்ற
பேருவலிசேர் மகிபா! மீட்சிப்
போராதனிற் படையாண்ட புண்ணியனே!
கண்ணியமும் புகழும் ஓங்கப்
பாரதத்தாய் உளமகிழ நீவாழ்ந்தாய்;
இன்னல்லை பதம் பெற்றயே!"

—க்ஷத்திரியன்.

ஸ்ரீமாந். தாஸ் அவர்களின் காத்திராப்பிரகாரமான மரணம் பாரதகண்டத்திலுள்ளாரனைவருக்கும் பெரும் திகிலை விளைத்துவிட்டது; இந்தியர்மீது அபிமானம்பூண்டுள்ளாரெல்லார்க்கும் பெருந்துயரை உண்டாக்கிவிட்டது. பாரதமாதா சிலமாசங்கள் செல்வதற்கிடையில் ஸ்ரீ தியாகராசச்செட்டியார், ஸ்ரீ வ். வீ. எஸ். ஐயர், தேசபந்துதாஸ் முதலிய அரிய புத்திரரத்தினங்களை இழந்து துன்புறலாயினள். ஸ்ரீமாந் தாஸ்போன்ற ஒரு சிறந்தபுத்திரனைப் பாரதமாதா இனி எப்போதாயினும் பெறுவளோவேன்பது சந்தேகம்.

ஸ்ரீமாந். தாஸ், கல்கத்தாவிலுள்ள திறமைவாய்ந்த நியாயதுரந்தரராகவிருந்து அம்முயற்சிவாயிலாக அளவற்றபொருளை யீட்டிவந்தவர். நுண்ணிய விவேகம் வாய்ந்தவர்; மிக்க வாக்குச் சாதுரியமுடையவர்; அஞ்சாநெஞ்சு படைத்தவர். பாரதமாதாவின் அடிமைத்திறத்தை நீக்கும்பொருட்டு மகாத்மாகாந்தி உழைப்பதைக்கண்டு தாமும் அவ்விஷயத்தில் மகாத்மாவுக்குத் துணைபுரிதல்வேண்டுமென்னும் நோக்கமுடையவராக ஸ்ரீமாந். தாஸ் அவர்கள் மகாத்மாவையடைந்து தேசஈடேற்றத்தின் பொருட்டு உழைத்துவரத் தலைப்பட்டனர்; தேசகைங்கரியஞ் செய்தற்குத் தமது நியாயவாதத்தொழில் பிரதிகூலமாகவிருத்தலைக்கண்டு, பல்லாயிரம் ரூபாவிற்கு மாசந்தோறும் வருவாயாகவிருந்த அத்தொழிலை விடுத்தார்; தமது செல்வம் முழுவதையும்தாய்நாட்டின்பொருட்டுஅர்ப்பணஞ் செய்தார்; அரசியல் ஞானியானார். மகாத்மாவின்பெயரும் தேசபந்துவின்பெயரும் பிரிவின்றி இணையாகத் தேசம் முழுவதும்போற்றப்படலாயின. கோடிக்கணக்கான சனங்கள் தேசபந்துவைத் தலைவராகக்கொண்டனர். "தேசபந்து" என்னும் பட்டமும் சனங்களாலேயே அவருக்கு அளிக்கப்பட்டது. ஸ்ரீமாந். தாசருடைய கெம்பீரமான தோற்றமும் வாக்குவன்மையும் கூர்ந்த மதியும் தூயசிந்தையும் அரசியல் விஷயமாக அவர் கைக்கொண்ட துறவும் பாரததேவியின் அடிமைத்திறத்தை நீக்கவேண்டுமெனக் கொண்ட விரதமும் இந்தியர்களால் அவரைத் தெய்வமெனப்போற்றச் செய்துவிட்டன. இந்த மகான் பாரதமாதாவின் அடிமைத்திறத்தை நீக்கும்படி படாதபாடெல்லாம் பட்டார்; மாதாவின் அடிமைத்திறத்தையும் வறுமையையும் நீக்கும்படி சிறையிருந்தார். சிற்சிலசமையங்களில் மகாத்மாவிற்கும் இவருக்குமிடையே அபிப்பிராயபேதங்கள் ஏற்பட்டன. இந்திய சட்டசபைகளில் அங்கத்தவர்களாகச் சேர்ந்துநின்று பரிபாலன முறைகளைத் திருத்தலாதமென்பது தேசபந்துவின் கொள்கையாகவிருந்தது. இந்திய அரசாங்கத்தில் எவ்விதமானதொடர்பமின்றி ஒத்துழையாமையினால் ஈடேறலாமென்பது மகாத்மாவின் கொள்கையாகவிருந்தது. இங்ஙனம் சிற்சில அபிப்பிராயபேதங்களிருந்தாலும் இருவர்நோக்கமுமொன்றுதலின் மகாத்மாவும் தேசபந்துவும் பரஸ்பரம் மதிப்புப் பாராட்டிவந்தார்கள். ஈற்றிலே ஸ்ரீமாந் தாஸ் அவர்கள் சுயராட்சியக் கட்சியின் தலைவரானார். பண்டிதர் மூர்த்திலால் நேயிறு அவருக்குத் துணைவரானார். சென்றஆறுமாசக்காலமாக ஸ்ரீமாந் தாஸரின் தேகசுகம் குன்றத்தொடங்கியது. ஆனால் அவர் தமது தேகசுகத்தைப் பொருட்படுத்தினாரல்லர். தாஸர் சிலமாசங்களாக நோய்வாய்ப்பட்டிருந்தனரேனும் அவருடைய முடிவு இத்துணைச் சடுதியில் வருமென எவருங் காத்திருக்கவில்லை. தாஸரின் காத்திராப்பிரகாரமான மரணம் எவர்க்கும் வெள்ளிடிபோலிருக்கின்றது. யாவரும் அவர் மரணத்தையிட்டு வருந்துவர்.

தாஸர் எடுத்த கருமம் இன்னும் நிறைவேறவில்லை. பாரதமாதாவின் கலக்கம் நீங்கவில்லை. இதற்கிடையிற் பாரததேவி தன்னிரு கண்களுள் ஒன்றை இழக்கலானாள்

"தாய்பசித்துக் கனிதேடிப் புசியாமுன்
விக்கலுற்ற கதையைப்போல
நோய்மிகுந்த திருநாட்டின் விடுதலைப்போர்
முடியாமுன் நுவங்கலாமோ
தாய்வருத்தம் தணிப்பவர்கள் இனியாரோ
தேசபந்து தரசவேந்தே
மாய்வதன்றி வாழ்வேது படையாட்சி
இனிஎவரை மதிப்பதையா".

என க்ஷத்திரியனிற் கூறியபிரகாரம் தேசபந்துவைப்போல் இனிமேல் ஒருவர் தலைமை வகித்துச் சுயராச்சியத் தொண்டைச் செய்தற்கு முன்வருவாரோ வென்பது சந்தேகம்.

பாரதமாதா சமீபகாலத்திற் சுதந்திரத்தைப் பெறுவது இறைவனுக்குச் சம்மதமில்லைப்போலும். பாரதமாதாவின் அரிய புத்திர ரத்தினங்கள் மூவர் சிலமாச காலத்தில் இவ்வுலக வாழ்வை நீத்தனர். இறைவனது திருவிளையாட்டை யார்தாம் கண்டறியவல்லர். "நல்ல குருநாதர் நம்மை வருத்துவதும் கோல்லவல்லக் கோல்லவல்லப்போல்லாக் குணம் போக்க" என்ற பிரகாரம் கடவுள் செயலெல்லாம் ஈற்றில் நன்மையைத் தருமென்பதே பெரியோர் கொள்கை. தேசபந்து வந்த கருமம் முடியுமுன் சென்றுவிட்டாரேன்று எங்களுக்குப் புலப்படக்கூடும். ஆனால் அவர் வந்த கருமம் முற்றுப்பெறுதிருந்தால் இறையவர் ஒருபோதும் அவரைத் தம்மிடம் கூப்பிட்டிருக்கமாட்டார். தேசபந்து வகித்துவந்த தலைமையை அவருடைய பிரியாநண்பரும் சிறந்த தேசாபிமானியுமாகிய மூர்த்திலால் நேயிறு அவர்களே இனி வகிப்பரேனக் காத்திருக்கின்றோம்.

(ஸ்ரீமாந் தாஸரின் சரித்திரச் சுருக்கம் இற்றைப் பிரசரத்திற் பிறிதோரிடத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றது.

## சேக்கிழார் நாயனாரின் சிவகைங்கர்யம்.

(முற்றொடர்.)

இவற்றையெல்லாம் செவிமடுத்திருந்த அரசனுக்குப் புதிய உணர்ச்சி உதித்தது. சமணசமயம் பொய் யென்பது அவனுக்குப் புலப்பட்டது (முன்னொருகாலத்தில் அசுரர்கள் தேவர்களை வருத்தினர். இருவருக்குமிடையே கடும் சமர் நிகழ்ந்தது. அமரர்கள் புறமிட்டனர் அசுரர்கள் தம சிவபூஜாதுரந்தரரானமையினால் அவர்களை வெல்லுதல் எவர்க்கும் அரிதாயது. அவர்கள் செய்யும் சிவபூஜை முறையைப் பிறழச்செய்தாலன்றி வெல்லுதல் அரிதென உணர்ந்த விட்டுணுமூர்த்தி ஓர் நவீன சமயத்தை உண்டுபண்ணினார். நீதனைச் "சாக்கிய குருவின் மாயனுங் கார்புரத்திற் சார்ந்து, கோக்களிற் றுரிவை போர்த்த கொன்றைவேணியன்மேலன்பு நீக்கியவ் வசுரர்தம்மை நிகழ்த்துபுன் மையர்தன்னில், ஆக்கிநல் லிலிங்கபூசை யிவொடு மகற்றினானே" எனக் கூர்மபுராணம் விளக்குகின்றது. "மாய னிடும்புன் விருள் உடைத்தோட வந்தொருவர், சேவிளம்பரிதி யெனச் சிவனருளா லவதரித்தார்" என்னும் பிறர்வாக்கானுமுணரக்கிடக்கின்றது. திருமாலின் உப அவதாரம் பதினைந்தனுட் பௌத்த அவதாரமுமொன்றும். இம்முறையே சமணசமய ஆதியி லுண்டான வகையாகும். இதனை யுணர்ந்த சமண குருமாருடைய முகங்கள் கரிந்தன. அரசன் நாயனாரைப் பார்த்து "என் அரிய மந்திரியே! யாம் மெய்யென நம்பிக் கேட்டுவரும் இந்த சீவகசிந்தாமணியை அவகதை யென்றும் பிரயோசனமற்றதென்றும் நீர் கூறினராயின், இம்மைக்கும் மறுமைக்கும் உறுக்கு உறுதி பயக்கத்தக்க சிவசரித்திமென்பது யாது? அது எங்குளது? அதனைக் கற்றுணர்ந்தோர் யாவர்? அதுவும் இந்தச்சீவகசிந்தாமணியைப்போல் இடையில் வந்த நவீன கதைதானோ? அன்றிப் புராதனமாயுள்ளதா? அதற்கு முதனூலுளதா? அங்ஙனமாயின் அதனைச் சொன்னவர் யாவர்? கேட்டோர் யாவர்? அது தவத்தை உணர்த்துகின்றதா? தவஞ்செய்து பேறுபெற்ற மெய்யடியார்களுடைய சரித்திரங்களை அந்நூல் கூறுகின்றதா? அவற்றையெல்லாம் எமக்குக் கிரமமாகக் கூறவேண்டு" மென்றான். சேக்கிழார் அரசனை நோக்கி "வேந்தே! திருவாரூர்த்கோயில்கொண்டருளும் தியாகேசர் தமது மெய்யடியார்களுடைய அடிமைத்திறத்தை உலகம் அறிந்துய்ந்து ஈடேறும்பொருட்டு "தில்லைவாழந்தணர்தம் மடியார்க்கு மடியேன்" என அடியெடுத்துக் கொடுப்ப, சமயகுரவருள் ஒருவராகிய சுந்தரமூர்த்தி நாயனார் ஓர் பதிகம் பாடியருளினார். அது திருத்தொண்டத் தொகையெனப் பெயர்பெறும்; பதினொரு திருப்பாடல்களையுடையது. திருநாரையூரில் எழுந்தருளியிருக்கும் பொல்லாப் பிள்ளையாரிடம் சகல சாஸ்திரங்களையும் ஐயந்திரிபற ஓதியுணர்ந்த நம்பியாண்டார்நம்பி என்பவர் அதனை வகுத்து ஓர் திருவந்தாதி பாடியருளினர். அது நம்பியாண்டார் நம்பி யந்தாதி யெனப் பெயர்பெறும். அவ்வந்தாதி உன் மூதாதையருளொருவராகச் சிறந்து விளங்கிய அபயகுலசேகரசோழ மகாராசனாலும் மெய்யடியாராக விளங்கும் சிவாலயமுனிவராலும் பெரிதும் போற்றிப்பாராட்டப்பெற்றது" எனக்கூறி அதன் கண்ணுள்ள அற்புத சரித்திரங்களையெல்லாம் விரித்து விளக்கியருளினார். அரசன் தன்னை மறந்து ஆனந்தசாகரந் தழுந்திச் செவிமடுப்பானாயினன்.

திருத்தொண்டர் சரித்திரம் முற்றுப்பெற்றவுடன் அரசன் சேக்கிழார்நாயனாருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கி "தேவரீர் இங்குஎழுந்தருளித் தமியேற்கு மந்திரியாய் அமர்ந்திருந்தமை அடியேன் அந்நியசமயப் படுகுழிப்படும்போது தடுத்தாண்டுகடைத்தேற்றும்பொருட்டன்றோ? இராச்சிய பரிபாலனஞ் செய்யும் அரசனாகிய என்னையே அந்நிய சமயத்தினர் தமது தந்திர முறைகளினால் வசப்படுத்தினரெனில் அறியாமையே குடிகொண்டுள்ள சாமானிய மனிதரைச் சிறிதும் சிரமமின்றித் தஞ்சமயத்துள் வீழ்த்துதல் திண்ணம். இனிவருங் காலத்திற் பற்பல நவீன சமயங்கள் தோன்றும். அவை சைவநன்மக்களை இடர்ப்படுத்தாவண்ணம் காப்பாற்ற வல்லது இச்சிவசரித்திரமேயாம். இது உலகெங்கும் பாய்புதல்வேண்டும். இச்சரித்திரம் எவர்க்கும் தெளிவாய் விளங்கும்பொருட்டுக் காப்பியமாக உரைத்துத் தருதல் தங்கள் கட"னெனக் கூறினான். சேக்கிழார்நாயனாரும் அங்ஙனஞ் செய்வதற்கு உடன்பட்டார். அரசன் அம்மெய்யடியாரைத் தக்கவாறு உபசரித்து வேண்டிய திரவியங்களை அளித்து விடையும் ஈய்ந்தான்.

சேக்கிழார்நாயனார் நல்ல சுபமுகூர்த்தத்திலே அங்கிருந்து புறப்பட்டுச் சிதம்பரத்தை அடைந்து, சிவகங்கையிலே விதிப்படி ஸ்நானம் முதலான கடன்களை முடித்துக்கொண்டு கனகசபையை அடைந்து சபாநாதரைத் தமது கண்களாற் றரிசித்து உள்ளம் நெக்குருகிக் கண்ணீர் ஆறுபோற் பெருகப் பரவசமாயினர். "கற்பனை கடந்த சோதிக் கருணையே! உலகிலுள்ளார் பலரும் தேவரீரது பெருமையைச் சிறிதும் உணராதவர்களாயும், உண்மைச் சமயம் இதுவென்பதை அறியுஞ் சத்தியற்றவர்களாயும் இருக்கின்றார்கள். அவர்களை அந்நிய சமயத்தினர் தமது தந்திர முறைகளினாலே மாயவலைப்படுத்துகின்றனர். அங்ஙனம் அவர்கள் பேரிடருறுவண்ணம் தேவரீரது திருவடித்தாமரைகளை அடைந்து பெருவாழ்வுறும் மெய்யடியார்களுடைய திவ்விய சரித்திரத்தை உலகிற் பிரசித்தப்படுத்தல்வேண்டும். அவ்வடியார்களுடையபெருமை இத்துணைத்தென்பதை அடியேன் அறியமாட்டேன். அதனைப் பெருங் காப்பியமாக விரித்துப் பாடுதற்குத் தேவரீர் கிருபை பாலித்தருளவேண்டு"மெனப் பன்முறை பிரார்த்தித்தார். பத்திவலையிற் படுபவராகிய நடராசப்பெருமானுடைய திருவருளினாலே "உலகெலாமுணர்ந் தோதற்கரியவன்" என ஓர் அசரீரிவாக்கு எழுந்தது. நாயனார் அத் திருவாக்கை முதலாகக் கொண்டு சிலகாலத்துட் பாடி முடித்து, அதற்கு "திருத்தொண்டர்புராணம்" எனநாமமுஞ்சூட்டியருளினார் இதனை அறிந்த அநபாய சோழராசனும் சிதம்பரத்தையடைந்து நடராசப்பெருமானைத் தரிசித்தனன். அப்பொழுது "சோழனே! நாம் அடியெடுத்துக்கொடுக்கச் சேக்கிழான் நம்முடைய தொண்டர்களது புராணத்தைப் பாடி முடித்தான். நீ அதனைக் கேட்கக்கடவை" என ஓர் வாக்கு அந்தரத்தில் எழுந்தது. சேக்கிழார்நாயனார் அப்புராணத்தைப் படித்து அதன் பொருளைத் தினந்தோறும் போதித்து வருவாராயினர். அப்புராண படனம் முற்றுப்பெற ஒருவருடகாலஞ்சென்றது. அதன்பின் சோழராசன் அத்திருமுறையையும் நாயனாரையும் தனது பட்டத்துயானைமேல் அமர்த்தி நகர்வலஞ் செய்வித்தான்; பல விசேட உற்சவங்களை நடாத்தினான். 'ஹர ஹர'என்னும் பேரொலியுடன் எல்லாம் மங்கலகரமாக முற்றுப்பெற்றவுடன் அரசன் அத்திருமுறையைக் கனகசபையிலே சேமித்து வைத்து நாயனாருக்குத் "தொண்டர் சீர் பரவுவார்" எனத் திருநாமஞ்சூட்டினன். இத் திருத்தொண்டர் புராணம் இப்பொழுது பன்னிரண்டாந் திருமுறையென வழங்கப்பெறுவதாம்.

அநபாய சோழமகாராசனை அந்நிய சமயப் படுகுழிப்படாது கரையேற்றியதும், மெய்ச் சமயமாகிய சைவசமய உண்மைப் பொருள்களை அவனுக்கு விளக்கியதும் எமது சேக்கிழார்நாயனார் அருளிச்செய்த திருத்தொண்டர் புராணமேயாம். அதுவே இப்பொழுதும் வழங்கப்பெறுவதாம். இக்காலத்தில் அதனைத் தக்கவாறு போதிக்கும் ஆசிரியர் இன்மையினால் அதன் உண்மையைப் பெரும்பாலார் அறிந்திலர். அறியாமைமிக்குள்ளோரும் தாழ்ந்த வகுப்பினருமான சைவநன்மக்கள் சிலர் அதனைச் சிறிதும் தெரிந்துகொள்ளாமையினால் அந்நியசமயிகளது மாய வலையிற் சிக்குகின்றனர்; அங்கும் இங்குமின்றித் தியங்குகின்றனர்; சிலர் மீண்டும ஒருவாறு கரையேறினர். சூரியன் தனது சிவந்த கிரணங்களாற் புறவிருளை நீக்குவதுபோல இத் திருத்தொண்டர் புராணமும் தன்னிடத்துள்ள அறுபத்துமூன்று உண்மை நாயன்மாருடைய திவ்விய அதிமதுர அற்புதசரித்திரவாயிலாக மக்களைப் பிடித்துள்ள அகவிருளை நீக்குவதாம். அத்துணைப் பெருமைஉடைத்தாதலினால் அது பெரியபுராணம் எனவும் வழங்கப்பெறும். எனவே எமது சைவ ஆலயம், மடம், வித்தியாசாலை முதலான இடங்கள்தோறும் கூடுமாயின் இல்லங்கள்தோறும் இத்துணைப் பெருமை வாய்ந்த திருத்தொண்டர் சரித்திரங்களும் ஏனைய சிவசரிதங்களும் நன்கு போதிக்கப் பெறல்வேண்டும். இதுவே இக்காலத்திற் சமயாபிமானம் பூண்ட சைவநன்மக்கள் ஒவ்வொருவரும் அத்தியாவசியகம் செய்யவேண்டிய பெருங் கடனும்.

## சட்ட நிருபண சபை அங்கத்தவர்களின் வேதனத்தைப்பற்றிய கூட்டம்.

சென்ற வெள்ளிக்கிழமை (19-6-25) சட்டநிருபணசபை உத்தியோகத்தரல்லாத அங்கத்தவர்கள் தங்களுக்குத் தனித்தனி 500 ரூபா மாச வேதனம் விதித்தல்வேண்டுமென்ற விஷயத்தையிட்டு யோசிக்கும் பொருட்டு ஒரு கூட்டங் கூடினர். அப்பொழுது அந்த அங்கத்தவர்களுள் ஒருவராகிய கௌரவ மிஸ்ரர் மாட்டின் என்பவர், சட்ட நிருபணசபை அங்கத்தவர் வேதனம் பெற நினைப்பது தக்கதன்றேனவும், வேதனமின்றி ஊழியஞ் செய்தலே அவர்கள் கடமையெனவும், அப்படி வேதனமின்றி ஊழியஞ் செய்ய முடியாதவர்கள் தங்கள் பிரதிநிதித்துவத்தை விடுத்துச் செல்வதே நன்றேனவும், சட்டநிருபணசபைப் பிரதிநிதிகளாக முற்பட்டுத் தேசநன்மையின் பொருட்டு அதிக திறமையோடு உழைக்கத்தக்க அபிமானிகள் சிலர், பொருட்குறைவினால் முற்பட்டு வராதொழிந்தனரேனவும், ஆதலால் இடையில் இப்படி யொன்றைக் கேட்பது சரியல்லவென்றுங் கூறினர். வேதன விஷயமாக கௌரவ மிஸ்ரர் மார்ட்டினவர்கள் எடுத்துக் காட்டிய நியாயங்களும் கொண்டுள்ள கொள்கையும் எவரும் அங்கீகரிக்கத்தக்கனவாம்.

## சமாசாரம்.

### சச்சிதாநந்த ராஜயோகிகள் சற்பிரசங்கம்.

இந்த மாதம் ௧௨ (26-6-25) வெள்ளிக்கிழமை இரவு ஏழுமணியளவில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்திலே சச்சிதாநந்தராஜயோகிகள் மாணிக்கவாசகசுவாமிகளது திவ்விய சரித்திரத்தைப் பக்கவாத்தியசகிதமாகப் பிரசங்கஞ் செய்வார்கள்.

### கள்ளமாய்க் கள்ளுச்சேர்த்தல்.

கள்ளமாய்க் கள்ளுச் சேர்த்தல் விற்றல் என்னும் குற்றங்காரணமாக நாவாந்துறை வாசிகளாகிய இருவருக்கு முறையே 75 ரூபாவும் 150 ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது.

### வண்டிப் பிரமாணம்.

மோட்டர், சைக்கிள் முதலான வண்டிகளை உபயோகிக்கும் முறைகளைப்பற்றி ஓர் புதிய பிரமாணம் அமைக்கப்படுகின்றது. அதுபற்றி வருகிற சட்டநிருபணசபைக் கூட்டத்திலே பேசப்படும்.

### திருத்தொண்டர் புராண படனம்.

இந்த மாதம் ௧௦ (24-6-25) புதன்கிழமை பகல் பதினொரு மணியளவில் வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையின் பக்கலிற் புதிதா யமைக்கப்பட்ட சமயகுரவர்களது ஆலய மண்டபத்திலே திருத்தொண்டர் புராண படனம் ஆரம்பிக்கப்பெறும். தினந்தோறும் பிற்பகல் ஆறுமணி தொடக்கம் இப்படனம் நடைபெறும்.

### கரவெட்டித் தபாற்கந்தோர்.

கரவெட்டியிலுள்ள தபாலேற்கும் கந்தோர் இப்பொழுது உப தபாற்கந்தோராக அமைக்கப்பட்டிருக்கிறது.

### மாணிக்கவாசகசுவாமிகள் குருபூசை

இத்தமீ௳ கஉ௳ (26-6-25) வெள்ளிக்கிழமை எமது சமயாசாரியருள் ஒருவராகிய மாணிக்கவாசகசுவாமிகள் குருபூசைத் தினமாகும். அச்சுபதினத்திலே சிவாலயம் திருமடம் வித்தியாலயம் முதலான இடங்களில் மகேசுரபூசை முதலியனவும் ஷெ சுவாமிகளது திவ்விய சரித்திரப் பிரசங்கமும் நடைபெறச் செய்தல் சைவ நன்மக்களது விசேடகடனாகும்.

### தென்மராட்சித் தமிழாசிரியர் சங்கம்

நிகழும் குரோதனஹு ஆனிமீ௳ கசஉ௳ (2-6-25) காலை ஒன்பதரை மணி தொடங்கிச் சாவகச்சேரி ஆங்கில வித்தியாசாலை மண்டபத்தில் உப வித்தியாதரிசி ஸ்ரீ T. K. பொன்னையா அவர்களின் முயற்சியால் ஓர் பகிரங்ககூட்டம் நடத்தப்படும். அன்றுமுற்பகல் ஆங்கில வித்தியாசாலைப் பிரதம வித்தியாதரிசி மிஸ்டர் H. S. பெறிறு அவர்களும், பிற்பகல் வித்தியாதரிசி ஸ்ரீ S கந்தையா அவர்களும் அக்கிராசனாதிபதியாயிருப்பார்கள். வித்தியாதரிசிகளும் ஆசிரியர்களும் புதுஒழுங்குச் சட்டத்திற்கியைய மாணவர்களுக்குக் கல்வி புகட்டும் முறையையிட்டும் இன்னும் ஆசிரியர்க்கு வேண்டிய விஷயங்களையிட்டும் பேசுவார்கள், சில விஷயங்கள் முன்மாதிரியாகப் படிப்பித்துக் காட்டப்படும்.

### வல்வைச் சைவ வாலிபர் சங்கம்

இந்தமாதம் அ-ந்தேதி ஞாயிறுக்கிழமை யிரவு ஏழுமணி யளவில் ஷெ சங்க ஆதரவின்கீழ் ஓர் விசேஷகூட்டம் சங்க மண்டபத்திலே நடைபெற்றது. பிறக்ரர் ஸ்ரீ க. சிவப்பிரகாசமவர்கள் சபைத்தலைவராக வீற்றிருக்கத் தேவார பாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாயது. ஸ்ரீமத் மு. தியாகராசக் குருக்களவர்கள் "திருநீலகண்டநாயனர்" சரித்திரத்தைப் பக்கவாத்திய சகிதமாகப் பிரசங்குசெய்தார்கள். சனங்கள் மிக ஆவலோடு கேட்டுக்கொண்டிருந்தனர். பின் தேவாரபாராயணத்துடன் கூட்டம் நிறைவேறியது. இந்தமாதம் (26-6-25) கஉ-ந்தேதி வெள்ளிக்கிழமை எமது சமயாசாரியராகிய மாணிக்கவாசக சுவாமிகளது குருபூசை நடைபெறும். அன்று மாலை 6மணியளவில் ஷெ சுவாமிகள் சரித்திரம் ஸ்ரீ க. மீனுட்சிசுந்தரம்பிள்ளை அவர்களால் பக்கவாத்திய சகிதமாகப் பிரசங்குசெய்யப்படும்.

கடித.

### தாய்க்கும் இரு பிள்ளைகளுக்கும் மரணதண்டனை.

மாத்துறையிலே ஒரு பெண்ணும் அப்பெண்ணின் புதல்வர் இருவரும் அங்குள்ள தனவந்தர் ஒருவரைக் கொலைசெய்தார்களெனக் குற்றஞ் சாட்டப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பெற்றார்கள்.

### தமிழ்வேத பாராயணக் கழகம்.

சென்ற வைகாசிமீ௳ உசஉ௳ சோமவாரத்தன்று திருஞானசம்பந்தப் பரமாச்சாரியஸ்வாமிகளின் குருபூசை கொழும்பிலுள்ள ஷெ கழக மண்டபத்திலே வெகு சிறப்பாய் நடந்தேறியது. அன்று சாயங்காலம் ஏழுமணி தொடக்கம் ஷெ கழகத்தின் ஆசிரியருளொருவரான சங்கீதவித்வான் பிரமஸ்ரீ சு. இரத்தினசாமி ஐயரவர்களால் ஷெ சுவாமிகளுடைய பிரபாவத்தையிட்டு ஓர் சிறந்த பிரசங்கம் செய்யப்பட்டது. பின்னர் திருவாளர் குமாரசாமியவர்களாலும் சென்னை வித்துவான் ஸ்ரீ ஆலாலசுந்தரம்பிள்ளை அவர்களாலும் குறிப்புரை கூறப்பட்டது.

கடித.

### திரிகோணமலை மாதர் ஐக்கியசங்கம்.

இச்சங்கத்தின் ஐந்தாவது கூட்டம் சென்ற வைகாசிமீ௳ கஎ-ந் தேதி சனிக்கிழமை பிற்பகல் ஐந்தரை மணியளவில் ஸ்ரீசண்முகவித்தியாலயத்திற் கூடியது. அத்தருணம் இந்தவித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் ஸ்ரீ கோவிந்தசாமி பி. ஏ. அவர்களால் 'தற்காலப் பெண்கள் நிலைமை' என்னும் விஷயம் கேட்போர் ஆனந்தமடையுமாறு பிரசங்குசெய்யப்பட்டது. ஷெ வித்தியாலயத் தலைமை ஆசிரியையாலும் சபைக் காரியதரிசியாலும் பிரசாரகருக்கு நன்றிகூறிய பின் தேவார பாராயணத்துடன் கூட்டம் பூர்த்தியாயது.

—ஆறுவது கூட்டம் வைகாசிமீ௳ உகஉ௳ சனிக்கிழமை பிற்பகல் ஐந்தரைமணியளவிற் கூடியது. அத்தருணம் ஸ்ரீமதி செ. உருக்குமணியம்மாள் அக்கிராசனந் தமரத் தேவார பாராயணத்துடன் ஆரம்பமாயது. பின் ஸ்ரீமதி லோகாம்பிகை யம்மாளால் "கற்பு" என்னும் விஷயஞ் செந்தமிழ் நடையில் பல அலங்காரங்களுடன் எழுதி வாசிக்கப்பெற்றது. அவ்விஷயத்தில் ஸ்ரீமதி வே. பரமபாக்கியம்மாளாலும் ஷெ வித்தியாலயத் தலைமை யாசிரியை ஸ்ரீமதி வள்ளியம்மாளாலும் சபைக்காரியதரிசி ஸ்ரீமதி தையல்நாயகியம்மாளாலும் குறிப்புரை பகரப்பட்டது. பின் ஷெ வித்தியாலயப் பிள்ளைகள் சிலராலும் ஸ்ரீமதி பரமபாக்கியஅம்மாளாலும் ஸ்ரீமதி லோகாம்பிகை அம்மாளாலும் ஸ்ரீமதி பொன்னம்மாளாலும் தேவாரம் ஓதப்படவே எட்டரை மணியளவில் கூட்டம் சமாப்தியாயிற்று. அடுத்த கூட்டம் (27-6-25) வருகிறசனிக்கிழமை நடைபெறும்.

—கடித.

### உபந்நியாசம்.

ஆனித்திங்கள் முதனுள் ஆதிவாரத்தன்று (14—6—1925) பிற்பகல் 2½ மணி யளவில் தெபுவாவைப் பகுதியிலுள்ள கினேட் தோட்டத் தலைமை லிகிதர் திருவாளர் அ. சுந்தரம்பிள்ளை அவர்கள் இல்லத்தில் அப்பகுதியில் உத்தியோகம் வகித்திருக்கும் தமிழ்மக்கள் பலர் தமிழர் சங்கமொன்று ஏற்படுத்தும்நோக்கமாக ஒருங்கு வந்து கூடினர். அத்தருணம் திருவாளர் அ. சுந்தரம்பிள்ளை அவர்கள் சபாநாயகராகவும் திருவாளர் சி. கனகரத்தினம் அவர்கள் காரியதரிசியாகவும் தெரிவுசெய்யப்பட்டனர். அதன்மேல் சபாநாயகரெழுந்து அங்கே சமுகமாயிருந்த அனைவரும் தனது அழைப்புப்பத்திரத்தை நன்குமதித்து அன்று சமுகமளித்ததற்காக வந்தனங் கூறிப் பின்னர் கூட்டத்தின் நோக்கத்தையும் அதனுல்விளையும் சில நன்மைகளையும் குறித்து நன்கு விளக்கினர். பின்னர், கழுத்துறைத்தமிழர் சங்கம் எனப் பெயரிய சங்கமொன்று கூடியவிரைவில் ஏற்படுத்தப்படுதல்வேண்டுமென்றும் எகிராகவரும் ஆனி உத்தர சுபதினத்தில் (28 6-1925) பிற்பகல் 2½ மணி யளவில் தெபுவாவையில் பொதுக்கூட்டமொன்று நடைபெற வேண்டுமென்று மதற்காக வேண்டிய ஒழுங்குகள் செய்யும்பொருட்டுச் சபாநாயகர், காரியதரிசி, திருவாளர் குமாரசாமி, இராசா, பொன்னையா, சுப்பிரமணியம், செல்லையா ஆகிய இவர்கள் தற்போது ஓர் நிர்வாகசபையாக விருக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

அக்கூட்டத்தில் சமுகமளித்திருந்த உதவி வித்தியாதரிசி திருவாளர் பொ. த. ஆறுமுகசாமி அவர்கள் சில குறிப்புரைகள் கூறவேண்டுமெனச் சபையார் அபிப்பிராயப்பட்டதினுல் தவறெழுந்து சில குறிப்புரைகள் கூறினர்.

தமிழ்மக்கள் தமது முன்னேற்றத்தின்பொருட்டுப் பல துறைகளிலும் ஒத்துழைக்கவேண்டியது மிக ஆவசியகமென்றும் பொதுநோக்கம் முற்றுப்பெறுவதன்பொருட்டு சாதி, மத, இ— வேறுபாடுகள் நோக்காதொழியவேண்டுமென்றும் பொதுநன்மைகருதி எவ்வகைத்தொண்டு புரியினும் அத்தொண்டெல்லாம் ஈஸ்வரதொண்டேயாமெனக் கருதல்வேண்டுமென்றும், தமது சமயவளர்ச்சியின்பொருட்டேனும் தேசமுன்னேற்றத்தின்பொருட்டேனும் சுயநலமெறுப்புடையராய் உழைப்பதற்கு முன்வரும் எவருக்கும் தம்மொழியிலுள்ள பாண்டித்தியம் ஓர் சிறந்த ஆபரணமாமென்றும் தைரியத்துடனும் கடவுள் நம்பிக்கையுடனும் எக்கருத்தையேனும் விடாமுயற்சியுடன் நாடி நிற்பவர் அநுகூலமடைதல் நிச்சயமென்றும் இன்னன சில கூறிச் சங்கம் நெடுங்காலம் நிலைத்துச் சிறந்த தொண்டுபுரிந்து நிற்கவேண்டுமென்று தான் மனப்பூர்வமாக விரும்புவதாகக் கூறி, தனது பேச்சை நிறுத்தினர். சபையோரவர்கூறிய உற்சாகவார்த்தைகளுக்காக நன்றிகூறி, தங்கள் பொதுக்கூட்டத்தன்று அவர் சமுகமாயிருக்கவேண்டுமென்றும் அன்றுபேசிய விஷயங்களை இன்னும் சிறிது விரித்து விளக்கல்வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனர்.

அதன்பின்னர் அக்கிராசனாதிபதிக்கு வந்தனங் கூறப்பட்டது. சிற்றுண்டி தாம்பூலம் பருமாறிய பின் கூட்டம் வெகுசந்தோஷமாய் நிறைவெய்தியது.

—கடித.

## இந்திய சமாசாரம்

### சைவசமயப்பிரவேசம்.

வட இந்தியாவிலே திருப்பதி என்னுமிடத்திலுள்ள [illegible] ஆலயத்திலே கிறிஸ்தவர் ஒருவர் சைவசமயப் பிரவேசஞ் செய்வதென்றார், [illegible] பழுதடைந்திருக்கும் ஓர் கூடால் ஆலயத்தைப் புதுக்குவிப்பதா மென்றும் [illegible] கூறுகின்றது.

### ஒருபெண்ணின் வீரம்.

சில தினங்களுக்கு முன் [illegible] டுக்குக் [illegible] [illegible] ஒரு [illegible] ஒரு வன் சென்று [illegible] வீட்டிலுள்ள ஒரு [illegible] [illegible] இருந்தான். [illegible] சந்தர்ப்பத்தை [illegible] கள்வன் எற்ற ஒரு தருணத்தை எதிர்நோக்கி அங்குப் பதுங்கியிருந்தான். சிறிது நேரங் கழிதலும் புடவை ஒன்றை எடுக்கும்பொருட்டு அப்பெண் கதவைத் திறந்து வெளியே வந்தாள். பதுங்கியிருந்த கள்வன் உடனே வீட்டினுட் பிரவேசித்தான். தனக்குப் பேராபத்து நேர்ந்ததெனவுணர்ந்த அப்பெண் கள்வனை உள்ளேவிட்டுக் கதவைப் பூட்டிக்கொண்டாள். கள்வன் கதவைத் திறக்கும்படி அவளுக்குப் பலமுறை கூறினுன்; குழந்தையைக் கொன்றுவிடுவதாகப் பயமுறுத்தினுன். அவள் கதவைத் திறப்பதற்கு இயையவில்லை. திருடன் குழந்தையைக் கொன்றபின் சுவரிலே கன்னம் வைத்து வெளியே செல்லும்பொருட்டுத் தலையை நீட்டினுன். அப்பெண் தன்னிடமிருந்த கத்தியினுல் அவனுடைய கழுத்தை வெட்டி வீழ்த்தினுள்.

### ஒரு பெண்மணி வஞ்சனையினின்றுந் தப்பியமை.

சில நாட்களுக்கு முன் முப்பது வயதுள்ள ஒரு கருப்பஸ்திரீ நாகபுரியிலிருந்து கியோல்சி என்னுமிடத்திற்குத் தனது 3வயசுக் குழந்தையுடன் புகைரதமார்க்கமாகப் புறப்பட்டாள். புகைரதம் புஷாவல் என்னும்ஸ்தானத்தையடையவே ஒரு கிழவன் அப் பெண்ணிருக்குமிடத்துக்குச் சென்று அவள் போகுமிடத்தை விசாரித்துத் தானும் அவளுடன் வருவதாகக் கூறி ரதத்தில் ஏறினுன். புகைரதம் சிறிது தூரம் சென்றவுடன் கிழவன் சில உணவுப் பொருள்களை அப்பெண்ணுக்குக் கொடுத்தான். பெண் அதனை உண்டவுடனே பிரக்ஞைபற்றுக் கீழே விழுந்து கிடந்தாள். அதிகநேரஞ்சென்றபின் அவள் மூர்ச்சை தெளிந்து எழுந்து பார்த்தபோது சிந்து மாகாணத்தைச் சேர்ந்த லார்கானு என்னும் ஒருவருக்குத் தான் கொண்டுபோகப் படுவதாக அறிந்தாள். சாதுபோல நடித்த அந்தக் கிழவன் அப்பெண்ணை ஓர் கிராமத்துக்குக் கொண்டுபோய் ஒரு மகமதிய நாவிதனிடம் முந்நூறு ரூபா பெற்றுக்கொண்டு விற்றுவிட்டான். இந்தச் சந்தர்ப்பத்திலே அப்பெண்ணின் பிரசவமும் நிகழ்ந்தது. மகமதியனுடைய உணவையும பாத்திரங்களையும் தீண்டுவதற்கு அவள் அருவருத்தனள். அதனுல் அவன் அவளை நிஷ்டூரமாக நடத்தினுன்; மகமதிய உடை அணியவேண்டுமெனக் கட்டாயப்படுத்தினுன்; தன் எண்ணப்படி நடப்பதற்கியையாமையினுல் அவளைக் கொல்லவும் முயன்றுன். இந்தச் சமாசாரத்தை அறிந்த இரகசியப் பொலிசர் அவளை அம்மகமதியனிடமிருந்து மீட்டு அவளது சுற்றத்தாரிடம் ஒப்புவித்தனர். மகமதியன் மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது.

### கிறிஸ்துவ மதத்தில் இந்தியருக்கு ஆர்வமில்லை.

#### ஒரு பாதிரியாரின் அபிப்பிராயம்.

லண்டன் ஆல்பர்ட் ஹாலில் மிஷனரிகளது பெருங்கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதில் சோட்டா நாக்பூர் பாதிரியார் இந்தியாவில் கிறிஸ்துவ மதத்தைப் பிரசாரப்படுத்த நடக்கும் வேலையைப் பற்றிப் பேசினுர். அப்பொழுது அவர் கூறியதாவது:— ஏசுநாதருடைய உபதேசங்களை ஏற்று நடக்க இந்தியர்கள் காத்துக்கொண்டு நிற்கின்றுர்களென்று நீங்கள் மனப்பால் குடிக்கின்றீர்கள். அத்தகைய உணர்ச்சியுடன்கூடிய கூற்றைக் கேட்க எனக்கு எப்பொழுதும் மிக்க ஆத்திரம் உண்டாகிறது. கிறிஸ்தவ மதத்தைப் பற்றிச் சென்ற இருபது வருஷத்திற்கு முன்பிருந்த அபிப்பிராயத்தையே தற்பொழுதும் இந்தியர் கொண்டிருக்கின்றனர். கிறிஸ்துவமதத்தில் அவர்களுக்கு முன்னைவிட அதிகப் பற்றுதல் ஏற்படவில்லை. உண்மை என்னவெனில் அவர்களுக்கும் அதற்கும் வெகுதூரம்.—சு. மி

### நகரும் மலை

இக்காலத்தில், நிலையாக நிற்கும் மலைகள் முற்காலத்திற் சிறகுகளுடன் பறந்துகொண்டிருந்ததாகவும், இந்திரன் தனது வஜ்ராயுதத்தால் அவற்றின் சிறகுகளை வெட்டியெறிந்ததாகவும் அதனுல் அவற்றின் பறக்கும் சக்தி ஒழிந்ததென்றும் சொல்லுகிறுர்கள். இப்பொழுது அமெரிக்காவில் கொலராடோபகுதியில் மீக்கர் என்ற இடத்தில் ஒருமலை சென்ற சில வருடங்களாக இடம்விட்டுநகர்ந்துகொண்டிருக்கிறது. அது மணிக்கு இரண்டடி வீதம் நகர்ந்துகொண்டிருக்கிறதாம். அது இரண்டாயிரம் அடி உயரமுள்ளதாம். ஜனங்கள் அது நகருங்காட்சியை விநோதமாகப் பார்க்கிறுர்கள். அந்த மலைக்கு அடியில் களிமண்பூமி இருப்பதாகவும், அந்தப்பூமி மலையைத் தாங்கமுடியாமல் கெகிழ்வதால் மலை வன்மையான பூமியை நோக்கி நகர்ந்துகொண் டிருக்கிறதென்றுஞ் சாஸ்திரிகள் சொல்லுகிறுர்கள்.

### தேசபந்து தாஸர் சரித்திரச் சுருக்கம்.

தற்காலத்தில் இந்தியாவெங்கும் தாண்டவமிடும் அரசியற் கிளர்ச்சி முதன்முதல் வங்கநாட்டிலேதான் தோன்றிப் பரவத்தொடங்கியது. இராஜா ராமமோகனராயர், இராமகிருஷ்ண பரமஹம்ஸர், விவேகானந்தர்போன்ற தியாக புருஷர்களையும், இன்றும் உலகத்திற்கு இந்தியாவின் ஜீவசக்தியைப் புலப்படுத்தும் ஜகதீச சந்திரவசு, ரவீந்திரநாதர், அரவிந்தபோஸ், ஸரோஜினிதேவி ஆகிய நல்லறிஞர்களையும் ஈன்றெடுத்துப் புகழ் சூடிய நாடு வங்கநாடு. வங்காட்டிற்குத் தமிழ்நாட்டின் தொன்மை மாட்சியில்லை. எனினும் புதுமை மாட்சியில் வங்கநாடே பாரதநாட்டின் முடி மணியாய் மிளிர்கின்றது.

தேச பக்தி விளைந்த திருநிலமாகிய வங்கதேசத்தில், தேச பக்த ராஜசிங்கமாகிய சித்தாஞ்சனர் கஅஎ0-ம் ஆண்டு நவம்பர் மாதம் ரு-ந் திகதி பிறந்தார். தன் மதிப்பினும் வீர சுதந்திர விருப்பத்திலும் தலைசிறந்து விளங்கும் காயஸ்தகுலத்தில் தோன்றினுர். இவர் தந்தையார் - பாபு பூபன் மோகன தாசர் - பிரபல வழக்கறிஞர்; ஏழைகளின் தோழர்; நல்ல தேசாபிமானி. தாசர் தாயாரோ மகா பரிசுத்த உள்ளம் வாய்ந்த பத்தினிக் கடவுள்; கணவனுக்கேற்ற காதலி; கற்பின் செல்வி. இத்தகைய தாய்தந்தையர்களின் தவப்பயனுய்த் தோன்றிய சித்தாஞ்சனர் இளமையில் அக்காலத்திய திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சிறிது தாய்மொழி பயின்றுர். அப்பால் கிறிஸ்திய கலாசாலையில் கல்வி பயின்று வருகையில், தேச சரித்திரத்தை ஆவலோடு கற்கத் தொடங்கினுர்.

இராஜதானி வித்தியாசாலையில் இவர் உயர்தரக் கல்வி பயின்றுர். அக்கல்லூரியைச் சார்ந்த சங்கங்களில் பழகி, நல்ல வாக்குவன்மை பெற்றுர். இப்பழக்கமே பிற்காலத்தில் தாசர் பிரசித்தி பெற்ற வாசாலகராய் விளங்கியதற்கு ஓர் அடிப்படையாய் அமைந்தது. போதகாசிரியர்கள் சித்தாஞ்சனரிடம் பேரன்பு செலுத்தினுர்கள்.

தம்பேருக்கு இசைந்தவண்ணம், சித்தரஞ்சனர் தம்மோடு பழகுவோர் உள்ளங்களை யெல்லாம் மகிழ்விக்கும் இயல்பு வாய்ந்தவர். இத்தகைய சுபாவம் இளமையிலேயே அவரிடம் குடிகொண்டு விளங்கியது. மாணுக்கனுயிருக்கும்போதே இவர் மனம் சமூகசேவையில் ஈடுபட்டது. இராப்பள்ளிச்சாலைகள் ஏற்படுத்தி இவர் அநாதைகளுக்கு அறிவுத்தானம் செய்தார். இங்ஙனம் பிறரை மகிழ்விப்பதையே தமக்கு இன்பமாகக் கொண்டார்.

சித்தாஞ்சனர் இளமையிலேயே இலக்கியங்களை விரும்பிக் கற்றுர். மேலைநாட்டுக் கல்விச் சக்கரவர்த்தி ஷேக்ஸ்பியர்பால் அவருக்கு அளவுகடந்த பக்தியுண்டு. இத்தாலியநாட்டு விடுதலைவீரனுகிய மாஜினியின் மணிவாக்குகளை அவர் நாடோறும் பாராயணம் செய்துவந்தார். நமதுநாட்டு மாணுக்கர்களைப்போல அவர் தாய்மொழியைப் புறக்கணித்ததேயில்லை. தாய்மொழி வளர்ச்சியைப் பற்றிய கவலை அவருக்கு இளமையிலேயே ஏற்பட்டுவிட்டது.

பி. ஏ. பட்டம் பெற்றபின் இவர் உத்தியோகப் பற்றை வெறுத்தார். அடிமை வாழ்க்கையை அடியோடு வெறுத்துத் தள்ளும் இவரது வைராக்கிய உள்ளம் அக்காலத்திலேயே உருப்பெற்று, உரம் பெற்று இடையறுது வளர்ந்து வந்தது. சித்தாஞ்சனர் இங்கிலாந்துக்குச் சென்றுர். பந்துக்கள் தடுத்ததை அவர்பொருட்படுத்தவில்லை. அங்கு ஆங்கில மக்களது தன்னரசுமாட்சியைக் கண்ணுற்றுர். தாய்நாட்டின் தொண்டுநிலையைச் சிந்தித்தார். இவரது சுதந்திர தாகம் அதிகரித்தது.

அப்போது தாய்நாட்டின் பெருங்கிழவரான தாதாபாய் ஆங்கில நாட்டிலே பாராளுமன்றில் பிரதிநிதியாக முயன்றுர். இவருக்கு நம் சித்தாஞ்சனர் தம் தோழரோடு துணையாக வந்தார். ஆங்கில நாட்டின் பல இடங்களிலும் உபந்நியாச வாயிலாகவும் பத்திரிகை வாயிலாகவும் கிளர்ச்சி செய்தார். தாதாபாய் வெற்றிபெற்று இத் தாசரைத் தழுவி நன்றிகூறினுர். அருங்கிழவரான தாதாவின் ஆசியுடனே, சித்தாஞ்சனர் பாரிஸ்டர் பட்டத்தோடு தாய்நாட்டிற்குத் திரும்பினுர். (வரும்)

"குமரன்"

**அஷ்டபந்தனமருந்து.**

இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சுத்தமான சரக்குகளைக் கொண்டு செம்மையாகச் செய்யப்பட்ட (சுவாமிக்குச் சாத்தும்) அஷ்டபந்தனமருந்து எம்மிடத்தில் விலைக்கிருக்கிறது.

ரூத்தல் ஒன்றின் விலை ரூபா 5.

ச. வைத்தியநாதக்குருக்கள்,
சிவன்கோவில்,
வண்ணார்பண்ணை.

(M. 37)



**ஆப்ரேஷன் இல்லாமலே சுலபமாய் நிவர்த்தியாய்விட்டது.**

கேஸரியின் விலையுயர்ந்த ஔஷதத்தின் குணத்தை மிகவும் மெச்சினேன் 'லோத்ரா' வைப்பற்றி என் அநுபவத்தை தக்கமேற்கு றிப்பிடுகின்றேன். அசாதாரணமான ஔஷதம் இன்றேன். ...சத்தில் வேறொருவியாதியும் இல்லை என் மனைவிக்கு வயிற்றில் மாய்க்கு வந்தது. என் மனைவிக்கு ஒருவித மான வலி இருந்து இடதுபாகத்தில் ஒருவிதமான வலி இருந்து வந்தது மேனாட்டு (இங்கிலீஷ்) வைத்தியம் எல்லாம் பிரயத்தனப்பட்டுக்கு மை மடைய வில்லை. பின் ராஜமந்திரி ஆஸ்பத்திரிக்கு அழைத்துப்போனதில் உடனே கர்ப்பபையில் சாஸ்திர சிகிச்சைசெய்யவேண்டு மென்றார்கள். இது என் மனைவிக்குச் சம்மதமில்லாததால் பெருங்கஷ்டத்துடன் ஊர் வந்துசேரும் தருணத்தில் வரப்பிரசாதிபோல் "லோத்ரா" வியாபகத்திற்கு வந்ததால் சென்னைக்கு ஆபரேஷனுக்கு வருமுன் இதை உபயோகித்துப் பார்க்க எண்ணங் கொண்டவனாய் தந்தி மூலமாய் ஆடர் கொடுத்து ஔஷதத்தை தருவித்துக்கொண்டு, முதல்வேளை மருந்து கொடுத்த மாத்திரத்திலேயே குணம் காண ஆரம்பித்தது இரண்டாம் வேளை மருந்து கொடுத்தவுடன் 8-மணிநேரம் நல்ல நித்திரைசெய்தாள். மறுபடி மூன்றாம்வேளை மருந்து மறுநாள் கொடுத்த மாத்திரத்தில் வலியெல்லாம் நின்றுவிட்டது. சத்தியமாய் நாளுக்கு நாள் சுகமடைந்து வந்தாள். "லோத்திரா" வினால் ஆபரேஷனில்தான் நிவர்த்தியாக வேணுமென்று இங்கிலீஷ் டாக்டர்கள் சொன்னவியாதி ஆபரேஷன் இல்லாமலே சுலபமாய் நிவர்த்தியாய் விட்டது என்று காக்கிநாட, கோதாவரி டிஸ்டிரிக்டு போர்ட் இஞ்சினியர் ஆபீஸ், மகா-ள-ள-ஸ்ரீ பி. சுப்பராயுடு அவர்கள் எழுதுகிறார்.

இந்த ஔஷதத்தைப் பற்றிய புத்தகத்திற்கு உடனே எழுதுங்கள்.

"கேசரி குடீரம்"
ஆயுர்வேத ஔஷதசாலை,
எழும்பூர், மதராஸ்.

(Y. 35 B)



இனம்! விலை ஞாபகம். இனம்!!

**பிரசித்திபெற்ற மைசூர் ஊதுவத்திகள்.**

| | | | |
|---|---|---|---|
| தர்பார்வத்தி சேர் 1க்கு | ரூ 10 முதல் | ரூ 24 வரை. |
| அம்பர்வத்தி | ,, 3 | ,, | 18 ,, |
| கஸ்தூரிவத்தி | ,, 4 | ,, | 12 ,, |
| பால்வத்தி | ,, 8 | ,, | 16 ,, |
| ஜவ்வாதுவத்தி | ,, 4 | ,, | 10 ,, |
| புனுகுவத்தி | ,, 3 | ,, | 6 ,, |
| பன்னீர்வத்தி | ,, 1 | ,, | 4 ,, |
| மத்தாப்புவத்தி | ,, 1 | ,, | 3 ,, |

**மைசூர் வாசனை வில்லைகள்.**

கஸ்தூரிவில்லை, கேசரிவில்லை, ஜவ்வாது வில்லை, புனுகுவில்லை, புதுக்கோட்டைவில்லை, பச்சைவில்லை. கிரயம் வில்லை 1க்கு 0-8-0 முதல் 1-0-0, 1-8-0, 2-0-0, 2-8-0, 3-0-0, 4-0-0, 5-0-0 வரை.

**அரகஜா!**

(ஜவ்வாதுகலந்த சந்தனம்.)

தோலா 1-க்கு ரூபா 2-0-0 முதல் ரூபா 3-8-0 வரை.

**தசாங்கம்.**

சேர் 1-க்கு ரூபா 1-8-0 முதல் ரூபா 2-0-0 வரை.

**சுத்தமான சந்தன எண்ணெய்.**

ஒரு அவுன்ஸ் பாட்டல் 1-க்கு விலை ரூபா 2-0-0.

**"சந்தனமரத்தூள்".**

பெரிய டப்பா 1-க்கு விலை ரூபா 3-0-0
சிறிய டப்பா 1க்கு விலை ரூபா 1-12-0

**பன்னீர் (முதற்றரம்)**

பெரிய பாட்டல் 1-க்கு விலை ரூபா 3-8-0
சிறிய பாட்டல் 1-க்கு விலை ரூபா 2-0-0

**"மைசூர் அத்தர் தினுசுகள்".**

கஸ்தூரி, மல்லிகைப்பூ, தாழம்பூ, மருக்கொழுந்து, குலாபி, சண்பகப்பூ, இரா, மஸ்மா முதலிய அத்தர்கள் தோலா 1க்கு விலை ரூபா 5 முதல் 10, 12, 15, 20, 25 வரை.

தங்களுக்குத் தேவையான வாசனைத்திரவியங்களுக்கு உடனே எழுதுங்கள்.

விலாஸம்:—

எச். சி. சந்திரா & கம்பேனி,
பெங்களூர் சிட்டி,
(இந்தியா).

(Q 61)



"ஸ்டாண்டேர்ட்"

**கொழுக்கியோடுகள்.**

**(Standard Tiles)**

பின்வரும் நியாயங்கள் பற்றியே நாம் இந்த ஸ்டாண்டேர்ட் ஓடுகளைத் தருவித்து விற்கின்றேம்:—

முதலாவது, இத்தோடுகள் விலைப்பாரங்குறைந்தனவும்.

இரண்டாவது, இவைகள் நெடுங்காலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கன.

மூன்றாவது, இந்த வடஇலங்கையின் தேச சுவாத்தியத்திற்கு இயைந்த ஓடுகள் இவைகளேயாம். இந்த ஓடுகள் உஷ்ணகாலங்களிற்குளிர்ச்சியையும் சீதளகாலங்களில் உஷ்ணத்தையும் தரும் தன்மையன.

இந்த ஓடுகளைச் சென்ற நாலு வருடகாலமாக நாம் தருவித்துவிற்றுவருகின்றேம். இந்நாலு வருடகாலத்தில் நாங்கள் ஆச்சரியப்படத்தக்க விதமாக இவை செலவழிகின்றன. மற்றும் ஓடுகளிலும்பார்க்க இவை சிறந்ததென்பதற்கு இந்த ஒரு நியாயமுமே போதிய சான்றாகும்.

S. வீரகத்திப்பிள்ளை,
சோல் ஏஜண்டு,
யாழ்ப்பாணம்.

(H. 34.)



புதிய தினுசுகள் சகாய விலைகள்

நூதனமான பட்டு ஜவுளிகள்.

எங்களிடம் தற்காலம் நாகரிகத்திற்கேற்ற பனாரீஸ், பெங்களூர், சேலம், கோயம்புத்தூர், கொர்னாடு, காஞ்சிபுரம், கும்பகோணம், தஞ்சாவூர், பாடிப்பேட்டை, பட்டணம், பாரீஸ் பட்டு முதலிய தினுசுகளில் சுத்தமான பட்டுச்சேலைகளும் ஜரிகைநூல் சேலைகளும், பட்டுச்சரிகைச் சால்வைகளும் தினுசுகளும் தயாராயிருக்கிறது.

ஒருதடவை வாங்கிப் பார்த்தால் அதின் நயம் தெரியும். வெளியூர் ஆடர்கள் வி. பி. மூலமாக அனுப்பப்படும்.

பி. ஆர். அனந்தநாராயணய்யர்,
ஜவுளி வியாபாரம்,
205, செட்டித்தெரு,
கொழும்பு.

P. R. Ananthanarayana Iyer,
Silk & Cloth Merchant,
205, Sea Street,
COLOMBO.

(Y 39).


## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச்சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவு பிடிக்கும் வண்மேற்கு ந. ச. ப. கரு பழனிச்சாமிப்பிள்ளையிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1924-ம் ஆண்டு ஏப்ரில் மீ.

இல. தே. ரூபா. ஊர் பெயர் நகைகளின் விபரம்

2 1 75 வண்கிழக்கு கெ. மு. செ. செயகுமுகமது பொன் சங்கிலிமணிக்கோர்வை 1
7 7 60 ஐயனார்கோவிலடி சபாபதி நாகலிங்கம் பொன் ஒருகல்லில்லாத கொலுசுக்காப்பு சோடி 1
17 11 10 சோனகதெரு கதிரவேல் ஐயாத்துரை பொன் ஒருகல்லில்லாத புறாச்சு 1
40 19 70 வண்மேற்கு க. வேணுகோபால் பொன்கடயம் 1 நீலக்கல்மோதிரம் 1 வெள்ளி கால் சங்கிலி சோடி 1
41 ,, 20 ஆரியகுளம் தம்பு சின்னையா பொன் திருகில்லாத தோடு சோடி 1
45 ,, 41 ஆரியகுளம் இளையதம்பி மாணிக்கம் பொன் சம்பணு வளையல் 1
61 22 26 வண்கிழக்கு வேலாயுதம் செல்லையா பொன் இமிட்டேசன் காதோலை சோடி 1
71 23 48 வண்கிழக்கு தம்பு சின்னையா பொன் திருகில்லாத கப்பிப்பூரானட்டியல் 1 சரிகை மணிக்கோர்வை 2
75 ,, 25 பறங்கித்தெரு இராசையா சின்னத்துரை பொன் காதோலை சோடி 1
77 24 10 செட்டித்தெரு அருணாசலம் செட்டி தியாகராசன் பொன் மனுக்கன் சிகப்புக்கல் சோடி $31\frac{3}{4}$
88 25 6 வண்கிழக்கு சின்னத்தம்பி ஆள்வாப்பிள்ளை பொன் திருகில்லாத ஒருகல்வைத்த கடுக்கன் சோடி 1
92 26 7 உடுப்பிட்டி வல்லிபுரம் வடிவேலுப்பத்தர் வெள்ளி அரைஞாண் 1
93 ,, 28 சாவகச்சேரி கந்தையா செல்லையா பொன் திருகில்லாத இமிட்டேசன் காதோலை சோடி 1
95 ,, 12 வண்கிழக்கு பொன்னு செல்லையா பொன் சிமிக்கிவாளி சோடி 1 கொண்டைப்பூ 1
113 29 20 புங்குடுதீவு குமாரசாமி இரத்தினசபாபதி ஐயர் பொன் கிளாவர்மோதிரம் 1 நீலக் கல்மோதிரம் 1
114 ,, 36 வண்மேற்கு ச. வேணுகோபால் பொன் சிகப்பு ஒருகல்வைத்தமோதிரம் 1

மேமீ.

124 1 25 வெள்ளாந்தெரு விசுவலிங்கம் செல்லப்பா பொன் காதோலை சோடி 1
129 2 30 வண்மேற்கு க. வேணுகோபால் பொன் மூன்றுகல்வைத்த மோதிரம் 1
148 5 24 வண்மேற்கு செல்லம் சபாரத்தினம் பொன் தகட்டுக்காப்பு சோடி 1
153 6 12 சோனகதெரு மீராசாகிபு சுச்சுமுகமது பொன் தகட்டுக்காப்பு 1
163 7 30 நாவாந்துறை பாலுத்துரையப்பா பொன் இமிட்டேசன் காதோலை சோடி 1
173 8 15 பறங்கித்தெரு சவுரிமுத்து பொன இமிட்டேசன் ஒரு திருகில்லாத காதோலை சோ1
179 ,, 6 வண்மேற்கு சின்னத்தம்பி ஆறுமுகம் வெள்ளி காற்சங்கிலி சோடி 1
183 9 50 கந்தர்மடம் சண்முகம் பொன்னையா பொன் திருக்கண்டமாலை 1
219 17 10 நல்லூர் சிதம்பரப்பிள்ளை செல்லையா பொன் திருகில்லாத சரட்டட்டியல் 1
225 18 8 நீராவியடி இளையதம்பி சிதம்பரப்பிள்ளை பொன் வெள்ளைக்கல்மோதிரம் 1
232 19 7 சண்டிலிப்பாய் வே. கந்தையா பொன் கொண்டைப்பூ 1
250 24 60 வண்மேற்கு தம்பையா கனரத்தினம் பொன் பதக்கத்துடன் சரட்டட்டியல் 1
252 ,, 60 வண்மேற்கு க. வேணுகோபால் பொன் பட்டணங்காப்பு சோடி 1
256 25 15 வண்மேற்கு செல்லம் கனகரத்தினம் வெள்ளி ஒரு திருகில்லாதகால்கொலுசுசோ1
270 28 50 வண்மேற்கு க. வேணுகோபால் பொன்கடயம் 1
271 ,, 8 ,, ,, சிகப்புக்கல் குண்டுவைத்த அரைப்பவுண் 1
272 ,, 25 ஆரியகுளம் கணவதிப்பிள்ளை வைத்திலிங்கம் பொன் இமிட்டேசன் காதோலை சோ1
278 29 10 வண்மேற்கு சின்னவன் சின்னப்பன் பொன் குவளைக்கடுக்கன் சோடி 1

ஜூன்மீ.

237 1 25 வண்கிழக்கு சின்னத்தம்பி ஆழ்வாப்பிள்ளை பொன் கொண்டைப்பூ 1 சாதா மோதிரம் 1
299 3 25 வண்மேற்கு கி. சண்முகவேலுப்பத்தர் பொன் மழுக்கன சிகப்புப் பதக்கங்கோர்த்தது சோடி 1
318 8 7 கோப்பாய் கல்லதம்பி முத்து வெள்ளி அரைஞாண் 1
325 9 10 வண்கிழக்கு ஆறுமுகம் கந்தையா பொன வெள்ளைச்கல் மோதிரம் 1
329 9 50 கொக்குவில்மேற்கு சினனத்தம்பி தம்பிப்பிள்ளைப்பத்தர் பொன யானைக்கண்ணி கட்டிய காப்பு 1 சாதாமோதிரம் 1

விற்பனவு:—1925-ம் ஆண்டு ஆனி மாதம் 12-ந் திகதி (25-6-25) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்டநகை பிறகேய்லாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

சி. ஐயம்பிள்ளை உடையார்,
வெந்திஸ்மேஸ்தர்.

(Mis 660.)

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

——0——

1893 ம் ஆண்டின் 8-ம் இலக்கச்சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவு பிடிக்கும் வண்கிழக்கு செ. நா. செ. சாமிநாதஞ்செட்டியாரிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

நம். உ. ரூ. ச. ஊரும் பெயரும் நகை விபரம்

1924 ஆம் ஏப்பிரல்மீ

2938 14 27 வண்மேற்கு முத்துக்குமாரர் சுப்பிரமணியம் பொன் கல்முசப்புவைத்த கைச் சங்கிலி 1
2963 17 20 கொட்டடி வைத்தியநாதர் முத்தையா பொன் சிலகல் விழுந்த கவுத்தோல் 1
2967 17 50 நல்லூர் வீ ஜே செல்வரெத்தினம் பொன் கல் முசப்புவைத்த கொலுசுக் காப்பு சோடி 1
2976 18 40 சோனகதெரு செ. மு. மீருமெய்தீன் பொன் சவடிக்கொடி 1
2977 18 50 வண் மேற்கு சுப்பர் வயித்திலிங்கம் பொன் டிம்மியுடன் கம்பிப்பூரானட்டியல் 1
2979 18 55 கொக்குவில் கார்த்திகேசு மருதன் பொன் பட்டணங்காப்பு சோடி 1
3025 21 50 கொழும்புத்துறை வேலு முருகேசு பொன் பட்டணங்காப்பு சோடி 1
3034 22 60 வண்மேற்கு முருகேசு ஐயாத்துரை பொன் அச்சரக்கூடு கோர்த்த ஒத்தைப் பட்டுக் குண்டுச் சங்கிலி 1
3053 23 50 சுண்டிக்குளி வல்லியாம்பிள்ளை சவுரிமுத்து பொன் பீலிக்காப்பு சோடி 1
3058 24 40 நாயன்மார்கட்டு ம. சிவசிதம்பரம் திருவிளங்கம் பொன் பட்டணங்காப்பு சோடி 1
3097 28 50 வண் மேற்கு ராமலிங்கம் சுப்பிரமணியம் பொன் பட்டணங்காப்பு சோடி 1
3100 28 100 சங்கானை சின்னத்தம்பி ராசமணி வயிரச்சன்னம் ஒவ்வொன்று வைத்த கடுக்கன் சோடி 1

மேமீ


3133 1 12 வண் கிழக்கு காசிநாதர் சபாபதி பொன் சிகப்புக்கல் ஒன்று வைத்த மோதிரம் 1
3144 3 52 கரையூர் செல்லத்தம்பி பெண் செல்லமுத்து பொன் கம்பிப்பூரானட்டியல் 1
3149 4 27 வண் கிழக்கு துரையப்பா செல்லத்துரை பொன் இமிட்டேசன் கல்வைத்த கவுத்தோல் 1 மேற்படி ஒரு கல் வைத்த மோதிரம் 1
3[illegible]70 5 37 50 கரையூர் வயிரமுத்து நாகலிங்கம் பொன் கம்பிப்பூரானட்டியல் 1
31[illegible]3 5 20 கொக்குவில் சிதம்பரநாதர் சபாபதி பொன் பிலமுசப்பு1 உலாந்தாக்கல் ஒவ்வொன்று வைத்த கடுக்கன் சோடி 1
3190 6 110 சோனகதெரு சேகுமெய்தீன் முகம்மது அப்துல்க்காதர் பொன் பட்டணங்காப்பு சோ 1 காசுபட்டுமணிக்கோர்வை1
3193 6 65 வண் கிழக்கு சின்னத்தம்பி செல்லப்பா பொன் பட்டணங்காப்பு சோடி 1
3200 7 75 கரையூர் வல்லியான் சுவக்கீன பொன் பீலிக்காப்பு சோடி 1 சிகப்புக்கல் தோடு சோடி 1
3205 7 75 குளாய் தாமு கணபதிப்பிள்ளை பொன் பட்டணங்காப்பு சோடி 1
3212 7 20 வண்மேற்கு காத்தமுத்துப்பத்தர் சபாரெத்தினப்பத்தர் சிகப்புக்கல் மோதிரம் 1
3231 9 50 வண்கிழக்கு ஆறுமுகம் அம்பலவாணர் பொன் புலிப்பல்லுக்கோர்த்த ஒற்றைப்பட்டுக் குண்டுச்சங்கிலி 1
3234 9 120 பூனகரி ஞானிமடம் முத்து நாகலிங்கம் கல்முசப்புவைத்த கொலுசுக்காப்பு சோடி 1 பீலிக்காப்பு சோடி 1
3256 11 25 வண்கிழக்கு துரையப்பா செல்லத்துரை பொன் பூச்சுக்கல்மோதிரம் 1
3260 11 56 கரையூர் முதலி ஆசீர்வாதம் பொன் கம்பிப்பூரானட்டியல் 1
3270 12 130 சோனகதெரு மஹம்குசாய்கிபு அப்துல்கபீது பொன் கடசம் சோடி 1 சவடிக்கொடி 1
3276 13 65 வைதடி ராமலிங்கம் சேனாதிராசா பொன் பதக்கத்துடன் சங்கிலி அட்டியல் 1 இலைச்சங்கிலி 1
3277 13 110 குசவன்குளம் ம க முத்துச்சாமி பொன் பதக்கத்துடன் செட்டிப்பூரானட்டியல் 1

விற்பனவு:—1925-ம் ஆண்டு [illegible] மாதம் 4-ம் திகதிக்குச்சரியான குரோதன வரு ஆனி மாதம் 21-ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்டநகை பிறகேய்லாக மிகுதி மேற்படி கடைத் திண்ணையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

அரு. செல்லையா உடையார்,
வெந்திஸ்மேஸ்தர்.

(Mis 662)


**தங்க மலாம் பூசிய ரிஸ்லெட் கெடியாரம்.**



இந்த கெடியாரம் பார்வைக்கு பொன் கெடியாரம் போலவேதோற்றம். வெகு அழகாயும் ஆச்சரியமாயும் இருக்கும். சரியான டைம் காட்டக்கூடியது. வெகு காலம் நன்றாய் போகக்கூடியது.

பொன் கில்ட் ரிஸ்லெட் கெடியாரமும் பொன் கில்ட் ஸ்பிரிங் பட்டையுடன் 6-8-0.

ஸ்ட்ரேட் செடில்மெண்டுக்கும் F. M. S. மலேயாஸ்ட்ரேட்டும் முன்பணமில்லாமல் C. O. D. மூலியமாக அனுப்ப முடியாது.

விலாசம்:—தனக அண்டு கம்பேனி,
பார்க்டவுன் போஸ்ட், மதராஸ்.

(H 35)



**தேக்கமரம்.**

புதிதாக வருவிக்கப்பெற்ற திறமான தேக்கமரங்கள். நீளம் 6 அடிதொடக்கம் 30 அடி வரையிலுள்ளன. கனம் 10 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம்வரையி லுள்ளன. நீண்ட மரங்கள் குறைவாயிருப்பதினால், எம்மிடம் வழக்கமாயெடுப்பவர்கள் தங்கள் ஆடர்களை ஏற்கனவே செய்துகொள்ளவேண்டியது.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானாறு,

தந்திவிலாசம்
ஆர் பி. வல்லுவெட்டித்துறை.

(H. 37)


வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. Ampikaipagan. for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.